# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, தருமபுரி

சுற்றறிக்கை எண் - 72/2020
நக எண் 046/2020/ஏ4

நாள் 09.10.2020.

## சுற்றறிக்கை

பொருள் மத்திய கூட்டுறவு வங்கி - வங்கியின் கிளைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு "கோவிட் -19" சிறப்புக் கடனுதவி திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கியதில் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் மேற்கொண்டது - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை
1. பதிவாளர் அவர்களின் கடிதம் நக எண் 19120/2020/மவகொ 1 நாள் 08.05.2020.
2. மத்திய வங்கியின் இதே எண்ணிட்ட சுற்றறிக்கை நாள் 11.05.2020.
3. பதிவாளர் அவர்களின் கடிதம் நக எண் 19120/2020/மவகொ 1 நாள் 14.09.2020.

.............

மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கோவிட் - 19 சிறப்புக் கடன் வழங்க பார்வை 1-ல் கண்டுள்ள பதிவாளர் அவர்களின் கடிதத்தில் வரப்பெற்ற ஒழுங்குமுறை விதிகளின்படி பார்வை 2-ல் கண்டுள்ள மத்திய வங்கியின் சுற்றறிக்கையில் இக்கடன்களை வழங்க ஏதுவாக இக்கடனுக்கான விண்ணப்பங்களை வங்கியின் அனுமதிக்க அனுப்பும்போது, பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் இணைத்து அனுப்ப வேண்டிய விவரங்கள் குறித்த ஒழுங்குமுறை விதிகளை சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பார்வை 3-ல் கண்டுள்ள பதிவாளர் அவர்களின் கடிதத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கோவிட் - 19 சிறப்புக் கடனுதவி திட்ட ஒழுங்குமுறைகளில் கீழ்கண்ட திருத்தத்தை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

2. திட்ட காலம்

இத்திட்டம் 31.03.2021 வரை அமலில் இருக்கும்.

5. கடன் அளவு

5.1. இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் வரை கடன் வழங்கப்படும்.

5.2. ஏற்கனவே பெற்றுள்ள கடனில் நிலுவைத் தொகை மற்றும் தற்போது பெறப்படும் கடன் தொகை சேர்த்து கடன் தொகை 10.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

எனவே இக்கடனுக்கான விதிமுறைகளுக்கு உட்பட்டு கடன் விண்ணப்பங்கள் தயார் செய்து வங்கிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து கிளை மேலாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -
பார்வை 2-ல் காணும் ஒழுங்குமுறை விதிகள்.

ஒம்/- கி. ரேணுகா
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

பெறுதல்,

1. அனைத்து கிளை மேலாளர்கள், 2. அனைத்து கள மேலாளர்கள்.
3. அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள். (கள மேலாளர் வழியாக).

நகல்,

1. தலைமையக அனைத்து பிரிவு மேலாளர்கள் / உதவி பொதுமேலாளர்கள்.
2. உட்பரிசோதகர், தருமபுரி / கிருஷ்ணகிரி., 3. ஆய்வுக்குழு, 4. சரக துணைப்பதிவாளர், தருமபுரி /கிருஷ்ணகிரி / ஓசூர். 5. மண்டல இணைப்பதிவாளர், தருமபுரி /. கிருஷ்ணகிரி.
6. தலைவர், இணைப்பதிவாளர் /மேலாண்மை இயக்குநர், துணைப்பதிவாளர் /முதன்மை வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் - மேசைக்கு.

9.10.2020

/உண்மை நகல் / உதவி பொதுமேலாளர் (கபச).